<u>மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், அறந்தாங்கி</u>

**அசல் வழக்கு எண்.** 136/2018

**வாக்குமூலம்.வா.சா.4**

| | | | |
|---|---|---|---|
| பெயர் | அஜித்குமார் | தொழில் | |
| த/பெ. | ரெங்கசாமி | வயது | 26 / 2025 |
| கிராமம் | | | |
| தாலுகா | | | |

1873–ம் வருடத்து 10–ம் சட்டத்தின் கீழ் சாட்சி பிரமாணம் செய்விக்கப்பட்டு 12.09.2025ம் தேதியில் விசாரணை செய்யப்பட்டது.

<u>1,3 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>

1. வழக்கின் வாதி முத்துவேல் எனக்கு உறவினர் இல்லை பழக்கம் தான். நான் வாதியின் அக்கா மகன் என்றால் சரியல்ல. நான் மறமடக்கி கிராமத்தை சேர்ந்தவர் இல்லை என்றாலும் ஆலங்குடி தாலுகா, கொத்தமங்கலத்தை சேர்ந்தவர் என்றால் சரிதான். தாவா சொத்து மறமடக்கி கிராமத்தில் உள்ளது. எனக்கு வழக்கு பற்றி அனைத்து விபரங்களும் தெரியும் என்றால் சரிதான். எனக்கு வழக்கின் 1,3 பிரதிவாதிகளான சின்னப்பா, ராஜாக்கண்ணு பற்றி தெரியாது. வழக்கில் வாதி முத்துவேல் என்னென்ன ஆவணம் தாக்கல் செய்தார் என்ற விபரம் தெரியாது. வழக்கு சொத்து சம்மந்தமாக வாதி புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியர் முன்பாக மனு தாக்கல் செய்து அது தள்ளுபடி ஆன விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பொதுவாக இடத்தை பார்வையிட்டு தான் பட்டா கொடுப்பார்கள் என்றால் சரிதான். வழக்கு சொத்துப்பற்றி வாதி முத்துவேலுக்கும் 1,3 பிரதிவாதிகளுக்கும் என்ன பிரச்சனை என்று நான் கேட்டுத்தெரிந்துக்கொள்ளவில்லை.

2. வழக்கு சொத்து 1,3 பிரதிவாதிகளுக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட விபரத்தை கேட்டுத்தெரிந்துக்கொண்டேனா என்றால் இல்லை. வழக்கு சொத்தில் 2 புளியமரம், 2 வாழை மரம் ,250 ஆரஸ்பதி மரங்கள் உள்ளன. தாவா சொத்திற்கான அடங்கல் விபரம் எனக்கு தெரியாது. வழக்கு சொத்தில் நான் சொல்வதுபோல் புளிமரம் இல்லை என்றாலும் 4000 ஆரஸ்பதி மரங்கள் உள்ளன என்றால் சரியல்ல. மேற்படி 4000 ஆரஸ்பதி மரங்கள் 3ம் பிரதிவாதி ராஜாக்கண்ணு 12 வருடங்களுக்கு முன்னால் நட்டது என்றால் அந்த விபரம் எனக்கு தெரியாது. தாவா சொத்தின் பட்டா எண். 43 புலஎண். 8/2 ஆகும். விஸ்தீர்ணம் 32 செண்ட் ஆகும். வாதி முத்துவேலின் அண்ணன் ரெங்கசாமி உயிருடன் இருக்கும்போது தாவா வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றாலும் அவர் இறந்தபிறகு தான் வழக்குப்போட்டு

இருக்கிறார் என்றால் சரிதான். தாவா சொத்தில் புளிமரம் இருப்பதாக நான் சொல்வதில் அந்த மரம் கஜா புயலில் விழுந்ததா என்றால் விழவில்லை. நான் வழக்கிற்காக பொய்யாக சொல்கிறேன் என்றாலும் தாவா சொத்து வாதியின் சொத்தாக இருந்து இருந்தால் கஜா புயலின் போது ஏற்பட்ட இழப்பிற்கு இழப்பீடு வாங்கியிருப்பார் என்றால் சரியல்ல. வழக்கின் 3ம் பிரதிவாதியை மிரட்டி பணம் பறிக்க வேண்டும் என்ற கெட்ட எண்ணத்தில் வாதியால் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. வழக்கு சொத்து கிட்டத்தட்ட 40 வருடங்களாக 3ம் பிரதிவாதி அனுபவத்தில் உள்ளது என்றால் சரியல்ல. வாதியின் பூர்வீக சொத்து.

3. வழக்கு சொத்தின் கிழக்கு புரம் ஆறுமுகம் இடம், மேற்கே ரோடு, தெற்கே ஆறுமுகம் இடம். தெற்கே தரிசாக உள்ளது. வடக்கே சக்திவேல் என்பவரது இடம். நான் சொன்ன நான்கெல்லை விபரம் தவறு என்றால் சரியல்ல. வாதி எனக்கு உறவினர் என்பதால் வழக்கு சொத்து பொறுத்து பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணையில்லை.**